




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையி

சார்பாக, தேசிய நுகர்வோர் தினவிழா நாகர்கோவில், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (18.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 44/2017 நாள்: 18.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**தேசிய நுகர்வோர் தினவிழா**
**இன்று (18.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பாக, தேசிய நுகர்வோர் தினவிழா நாகர்கோவில், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (18.01.2017) நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தலைமையேற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24-ம் தேதி தேசிய நுகர்வோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம் மற்றும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் இணைந்து "நுகர்வோர்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு" என்ற தலைப்பில், இன்று தேசிய நுகர்வோர் தினம் கொண்டாடப்பட்டது.

நாம் ஒவ்வொருவரும் நுகர்வோர்தான். நமக்கென்று உரிமைகளும், கடமைகளும் உள்ளன. பொதுமக்கள் எந்த பொருட்கள் வாங்கினாலும் அப்பொருள் தயாரிக்கப்பட்ட இடம், தயாரிக்கப்பட்ட நாள், காலாவதியாகும் தேதி மற்றும் ஐ.எஸ்.ஐ. முத்திரை அல்லது தர சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா என நன்றாக பார்த்த பின்புதான் பொருள்களை வாங்க வேண்டும். மேலும் அந்த பொருள்கள் மீதான ரசீதுகளை தவறாமல் பெற்றுக்கொண்டால், ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அதனை உரியகாலத்திற்குள் மாற்றிக்கொள்ள முடியும். மேலும் அவர்கள் அரசாங்கத்திற்கு வரி கட்டுவதற்கு வழிவகை செய்ய முடியும். அதன் மூலம் அரசால் பல்வேறு வளர்ச்சி பணிகள் ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ள முடியும். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், சாலை வசதிகள், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைகள், மருத்துவமனைகள் போன்ற பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எனவே நுகர்வோர்களாகிய நீங்கள் காலாவதியான பொருள்களை வாங்குவதை தவிர்ப்பதோடு, மற்றவர்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மாவட்ட வழங்கல் அலுவலகத்தை அல்லது கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையத்தை அணுகி, தங்களது குறைகளை தெரிவித்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதன்பின்பு 2016-ம் ஆண்டில் சிறப்பாக குடிமக்கள் நுகர்வோர் மன்றம் செயல்படுத்தியமைக்காக தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கு ரூ. 1,500/-க்கான காசோலையினையும், நாகர்கோவில் டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அவர்களுக்கு ரூ. 1,000/-க்கான காசோலையினையும், வல்லன்குமாரன்விளை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளருக்கு ரூ. 500/-க்கான காசோலையினையும், மேலும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் திறனாய்வு போட்டிகளில் வெற்றி பெற்ற 9 மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி. டி.சின்னம்மாள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் தலைவர் கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. எம். தாமஸ், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு. ரவீந்திரன், மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் மரு. ஆர். கருணாகரன், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் (நாகர்கோவில்) திரு. பி. நடராஜன், தோவாளை வட்ட நுகர்வோர் பாதுகாப்பு மைய பொதுச்செயலாளர் திரு. சி.சுப்பையா, மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் (ஈத்தாமொழி) தலைவர் திரு. சி.தங்கசபாபதி, கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மைய பொதுச்செயலாளர் திரு. டி. சிதம்பரம்பிள்ளை, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் டி. சகிலகுமாரி, தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு. மன்னன் பெருமாள், டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. ஆர். குளோறி பாக்கிய லீலா, முதுகலை ஆசிரியர் திருமதி. கீதா சாள்ஸ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.